நல்லூர் பிரதேச நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 185 ஆங்கீரச வைகாசி 17 ( 30 . 05 . 1992 ) சனி

## ★ ஜனாதிபதி சொல்கிறார் வடக்கை கைப்பற்ற வவுனியா வரவில்லை!

நானும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் வவுனியா வந்திருப்பது வடபகுதியை கைப்பற்றுவதற்காக அல்ல இவ்வாறு குறிப்பிட்டார். ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் செயலகத்தில் உரை நிகழ்த்திய போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார் அங்கு தொடர்ந்து பேசிய அவர் ''சிங்கள பெரும்பான்மை இனம் இலங்கையில் சிறுபான்மை இனத்தை — 04 ஆம் பக்கம் பார்க்க

# முப்படை தளபதிகள் நெறிப்படுத்திய நடவடிக்கை தோல்வியில் முடிந்தது

## வளலாய் கண்ணிவெடியில் 2 கவச வாகனங்கள் தகர்ப்பு

வடபகுதியில் நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிந்த இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்கா முப்படைத் தளபதிகளும் இணைந்து நெறிப்படுத்தியதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலாலிப் படையினர் மேற்கொண்ட ஒப்பரேஷன் மாருதி' என்ற இந்த நடவடிக்கையில் புதிய ரி-55 டாங்கிகளும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தோல்வியடைந்த இந்த இராணுவ நடவடிக்கையில் 11 படையினர் பலியானதாகவும் 40 படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்திய ரட்ன, கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான் பெர்னாண்டோ, விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் ரெரன்ஸ குணவர்தன ஆகிய முப்படைத் தளபதிகளும் இந்த —04 ஆம் பக்கம் பார்க்க

## 9 வேங்கைகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் பலாலி இராணுவத்துடன் தொண்டமனாறு வெளிச்ச நிலையம், பகுதி தம்பாலை சந்தி ஆகிய பகுதிகளில் நேரடியாகப் போராடி படையினரை விரட்டியடித்த மோதலில் 9 போராளிகள் வீரச்சாவு எய்தினர்.

லெப். இசைவாணன் (இ. கணேசதாஸ் கரவெட்டி) வீரச்செல்வன் (பா. ஜோசப் எடிசன் நீர்வேலி) ஆவுடையான் (சி. குலேந்திரன் நவாலி) துரோணன் (கோ. கோடீஸ்வரன் தம்பலகாமம்) சிவகுமாரன் (ச. ஜெகானந்தன் வளலாய்) பவளன் (மநந்தகுமார் தொண்டமனாறு) தங்கப்பன் (பொ. - 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆறு வேங்கைகளுக்கும் ஆவரங்காலில் அஞ்சலி

நேற்று முன்தினம் தொண்டமானாறு. அச்சுவேலிப்பகுதியை நோக்கிப் புறப்பட்ட இராணுவத்தினரை விரட்டியடித்த கடும் சமரில் வீரச்சாவை எய்திய ஆறு போராளிகளின் புகழுடம்புகள் புலிக்கொடி போர்த்தப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக ஆவரங்கால் நடராசா இராமலிங்க மகா வித்தியாலயத்தில் சேட மேடையில் நேற்றுப் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை வரை வைக்கப்பட்டிருந்தது.

பெருந்தொகையான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர். புலிகள் பிரமுகர்களின் இரங்கற் கூட்டத்தினையடுத்து ஆறு வீரவேங்கைகளின் புகழுடம்புகள் பாண்ட் இசையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் மயானத்திற்கு இராணுவ மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டன. 07.06

## ● நேற்று முன்தினம்முதல் இடம் பெயர்ந்தவர்களுக்கு மூன்று வார இலவச நிவாரணம்

நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து வடமராட்சி வலி கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு மூன்று வாரகாலங்களுக்கு உடனடியாக இலவச உலர் உணவு வழங்கப்படும் என யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்தார்.

அத்துடன் இப்பகுதி மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். [47.25]

## ஐந்து மீனவர்களையும் விடுவிக்கஇராணுவம் மறுப்பு

இராணுவத்தினரால் கடலில் வைத்து பிடித்துச் செல்லப்பட்ட கிறிசாந் அரியரெத்தினம், பிறான்சிஸ் நிக்கிலாஸ், அந்தோனி பிள்ளை மனோகரன், ஞானதேவல், குணசேகரன், பிரங்குப்பிள்ளை கிறிஸ்தோபர் ஆகிய ஐந்து மீனவர்களும் உடனடியாக விடுதலைசெய்யப்பட மாட்டார்கள் என்றும் கடற்படைத் தலைமையகம் யாழ் அரச அதிபருக்கு தெரிவித்துள்ளது

இந்த ஐந்து மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு இளவாலை தேவாலய குருவானவர் யாழ் அரசாங்க அதிபரை கோரியிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது 47

## பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

நேற்று முன்தினமிரவும் நேற்றுக்காலையும் பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து வலிகாமம், தொண்டமானாறு நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

அனேகமான ஷெல்கள் வலிகாமம் தொண்டமானாறு பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன.

படையினர் முகாம் பகுதிகளிலிருந்தும் துப்பாக்கிப்பிரயோகத்தினையும் மேற்கொண்டிருந்தனர். (07.06)

## தீர்மானம் நிறைவேறியது

விடுதலைப்புலிகளை இந்தியாவில் தடைசெய்தமைக்காக பிரதமர் நரசிம்மராவ், உள்துறை அமைச்சர் எஸ் பி சவான் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நேற்று நடைபெற்ற அ. இ. மு. க. செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

## வவுனியா, மான்குளம் நோக்கி முன்னேறும் முயற்சியும் முறியடிப்பு

வவுனியா - மன்னார் - மதவாச்சி வீதியில் வவுனியா மான்குளம் பகுதி நோக்கி முன்னேற படையினர் எடுத்த முயற்சி புலிகளின் தொடர் தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டது

இதனையடுத்து படையினர் இப்பகுதியில் கடுமையான ஷெல் தாக்குதலை சரமாரியாக மேற்கொண்டனர் செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்தும் படையினர் கடும் ஷெல் தாக்குதலை நடத்தினர்

## அச்சுவேலிப் பகுதிக்கு மீண்டும் மக்கள் திரும்பினர்

நேற்று முன்தினம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த அச்சுவேலிப் பகுதி மக்கள் நேற்றுத் தத்தமது இருப்பிடங்களுக்கு திரும்பிச்சென்று கொண்டிருந்தனர்.

இராணுவம் பின்வாங்கியதையடுத்து இடைக்காடு கதிரிப்பாய் பத்தமேனிப் பகுதி மக்கள் தத்தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

இராணுவம் வந்துசென்ற இடங்களுக்கு விடுதலைப்புலிகள் முன்சென்று பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபின்பே இப்பகுதிகளுக்கு மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். —04 ஆம் பக்கம் பார்க்க

## மகஸீன் சிறையிலுள்ள சந்தேக நபர்கள் விவரம்

ஜோன் பொஸ்கோ எருடியநாதன் தாளையடி, மகேஸ்வரன் திலீபன் உரும்பிராய், சுஜேந்திரன் றமேஷ் கோப்பாய், வின்சன் கெனடி பேனாட் பருத்தித்துறை. எஸ். குமாரசாசன் ரெபின் பண்டத்தரிப்பு. ஜீவானந்தசிவம் இராசு ஆனைக்கோட்டை, பாலசுப்பிரமணியம் சானந்தன் சங்கானை, சிவராசா டிஸ்கோ யாழ்ப்பாணம், சிவஞானம் கிருந்தன் மானிப்பாய், மூத்துலிங்கம் பகிவாணன் ஊர்காவற்துறை, அல்பிரட் நிக்கொலஸ் கொட்டடி, சுப்பிரமணியம் சற்குணநாதன் மாவிட்டபுரம், டானியல் தோமஸ புன்னாலைக்கட்டுவன், சண்முகம் சின்னையா கோப்பாய், சுப்பையா ஜெயராஜன் கொடிகாமம், குமாரசாமி சத்தியசீலன் உடுவில். அரியகுட்டி நவரம் ...04 ஆம் பக்கம் பார்க்க

## பஸ் குண்டு வெடிப்பில் இறந்தோர் தொகை 13 ஆகியது

அண்மையில் தமிழ் நாடு விருது நகர் பகுதியில் பஸ் வண்டியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் பலியானோர் தொகை 13 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக இந்திய வானொலி குறிப்பிட்டது.

# மட்டக்களப்பு தாக்குதல் 29 படையினர் பலி!

மட்டக்களப்பு வாகனேரி மியான்குளம் வீதிச்சந்தியில் அமைந்திருந்த படையினரின் காவல் நிலையம் ஒன்றின் மீது நேற்றுக்காலை புலிகள் நடத்திய தாக்குதலில் 29 படையினர் பலியானதாகவும் 6 படையினர் படுகாயமடைந்ததாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒன்றரைமணிநேர தாக்குதலில் புலிகள் படையினர் மீது ரொக்கட் தாக்குதல் நடத்தியதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

மூன்று முனைகளிலிருந்து புலிகள் இத்தகைய தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

பரந்தன் இரசாயன தொழிற்சாலை

# நிலைமை சீரான பின்னரே செயற்படுமென அறிவிப்பு

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வடபகுதியில் நிலைமை சீரான பின்னரே மீண்டும் செயற்படும் என்று தொழிற்சாலைத் தலைவர் உபாலி டி சில்வா தெரிவித்ததாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

இங்கு பணியாற்றிய மூந்நூறு ஊழியர்களுக்கும் தொழிற்சாலை செயற்படாத போதும் மாதாந்த வேதனம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எழுதுவினைஞர் பற்றாக்குறை

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் எழுதுவினைஞர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திணைக்களத்தில் எழுதுவினைஞருக்கு 44 வெற்றிடங்கள் உள்ளதாகவும் ஆனால் அண்மையில் 23 எழுதுவினைஞர்களை யாழ். செயலகம் சுகாதாரத் திணைக்களத்துக்கு நியமனம் செய்ததாகவும் யாழ் சுகாதாரத் திணைக்கள வட்டாரம் தெரிவித்தது.

மிகுதி 21 எழுதுவினைஞர்களை நியமிக்கும்படி யாழ். சுகாதாரத் திணைக்களம் யாழ அரசாங்க அதிபரை கேட்டிருப்பதாக அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது. (47)

## விஷமப் பிரசாரம் செய்வோர் என்னைக் கொல்லவும் தயங்கார்

- ஜனாதிபதி

''எனக்கு எதிராக விஷமப் பிரசாரம் செய்வோர் என்னைக் கொல்லவும் தயங்க மாட்டார்கள்'' என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ கூறியுள்ளார்.

புத்தளக் கூட்டத்தில் இவ்வாறு கூறிய அவர் 'அதன் மூலமாக மாத்திரமே அவர்கள் வெற்றியாளர்களாக முடியும்' என்றும் சொன்னார்.

## இந்திய கொள்ளைக்காரி பற்றி லண்டனில் புத்தகம்

பெயரைக் கேட்டவுடன் இந்திய மக்கள் நடுநடுங்கிய கொள்ளைக்காரி புலான்தேவி இப்போது குவாலியர் மத்திய சிறையில் இருக்கிறாள் இவளின் வாழ்க்கை வரலாறு பல வர்ணப் படங்களுடன் புத்தகமாக வெளிவந்துள்ளது.

இங்கிலாந்தில் வசிக்கும் இந்தியப் பெண் மாலா சென் இந்திய அரசின் அங்கீகாரம் பெற்றுச் சிறையில் புலான் தேவியைச் சந்தித்துப் பேசி அவளுடன் பல நாள்கள் பழகி அவளிடம் கேட்டறிந்தவைகளையும், இந்திய புலன் ஆய்வுத் துறையினர் கொடுத்த தகவல்களையும் புலான்தேவி உதவிசெய்த வறிய குடும்பங்களைப் பேட்டி கண்டு சேகரித்தவைகளையும் தொகுத்து இந்திய கொள்ளைக்காரர்களின் ராணி (INDIAN QUEEN OF BANDIT) என்ற இப் புத்தகத்தை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார்.

இப்போது இந்தப் புத்தகம் மேலை நாடுகளில் விற்பனையில் சக்கைப்போடு போடுகிறது. 'மாலா சென்' இப் புத்தகத்தின் இரண்டாவது பதிப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (19)

## சு. க. தீர்மானம்

விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும், குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளதாக 'தினமின' சிங்கள நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

## செய்முறைப் பரீட்சை

1990, 1991 ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் அழகியல் பாடங்களுக்குத் தோற்றி எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சை ஜூன் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

பரீட்சைத் திணைக்களம் இப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றும் போது பின்வரும் ஆவணங்களைத் தவறாது கொண்டு வருமாறு பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

செல்லுபடியாகும் ஆளடையாள அட்டை, கையொப்பத்தை உறுதிப்படுத்திய பிரவேச அட்டை, பரீட்சைக்குப் படித்த பாடங்களின் அட்டவணை, பாவிக்க விரும்பும் சுருதி வாத்தியக்கருவி, பரத நாட்டியத்திற்கேற்ற உடை என்பனவாகும். (18)

## சுதந்திரக்கட்சியின் தீர்மானத்தில் மாற்றமில்லை

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீர்மானத்தில் மாற்றம் எதுவுமில்லை என்று நேற்றுக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால் இது தொடர்பாக தமிழ்க்கட்சிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதென இக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கருத்தரங்குகள்

இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தற்போது வாழும் பிள்ளைகளின் போஷாக்கின்மை தொடர்பான தொடர் கருத்தரங்குகளை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தற்போது தொடர்ந்து நடாத்தி வருகின்றது.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் போஷாக்கை அதிகரிக்கும் நோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கொக்குவில் போஷாக்கு புனர்வாழ்வு நிலையம் ஒன்று அமைக்கப்பட உள்ளதாக இணையம் தெரிவித்துள்ளது இதே போன்றதொரு நிலையம் வெகுவிரைவில் யாழ்ப்பாணத்திலும் திறக்கப்பட உள்ளதாகவும் இணையப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் (15)

## இசைச் செவ்வி

அகில இலங்கை கம்பன் கழகம் சங்கீத பூஷணம் எஸ். திலகநாயகம் போலைப் பாராட்டி நடாத்தும் இசைச் செவ்வி நல்லூர் கம்பன் கோட்டத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஒரு லட்சம் சிறுவர்கள் இந்தியாவில் அடிமைத் தொழிலில்

இந்தியாவில் ஒரு லட்சத்துக்கும் மேலான சிறுவர்கள் அடிமைத் தொழிலில் பலாத்காரமாக ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

ஏழு வயதில் இருந்து பதினைந்து வயது வரையிலான சிறுவர்களே இவ்வாறு பலாத்காரமாக அடிமைகளாக்கப்பட்டு கூலி எதுவுமின்றிச் சரியான உணவும் இன்றி வேலை வாங்கப்படுகிறார்கள்.

சம்பளம் பின்னும் தொழிலில் இவர்களை ஈடுபடுத்தியுள்ள முதலாளிகள் இந்தச் சிறுவர்களை நாளுக்கு 20 மணித்தியாலம் கட்டாயப்படுத்தி வேலை வாங்கியுள்ளனர்.

## கொழும்பில் பத்திரிகையாளர் மூவரால் தாக்கப்பட்டாராம்

கொழும்பில் வைத்தும் கடந்த செவ்வாய்க்கிழமை பத்திரிகையாளர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உள் தகராறு காரணமாக (டி. யு. என் எவ்) ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பத்திரிகையாளரே இவ் விதம் தாக்கப்பட்டாராம்

ராஜாளியாவின் ஆசிரியர் வன்டிகொல இது பற்றிப் பொலிஸில் புகார் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர் தன்னைத் தாக்கிய மூவரில் ஒருவர் டி, யு என், எவ் தலைவர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலர் என்றும் தெரிவித்துள்ளார்.

## வீரப்பனைத் தேடி வனத்தில் வேட்டை

சந்தனமரக் கடத்தல் மற்றும் கொலைச் சம்பவங்கள் தொடர்பாகத் தேடப்பட்டு வரும் வீரப்பன் தன் சகாக்களுடன் தற்போது பெரியார் மாவட்ட வனப்பகுதியில் நடமாடிவருவதாகத் மிழகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது,

வீரப்பனைக் கைதுசெய்வதில் பொலிஸார் பல சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் எனினும் வனத்தில் அவனைப் பிடிக்கத் தேடுதல் வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் சென்னைச் செய்திகள் கூறின.

## விடுதி வசதி ஏற்பாடு; பல்கலைக்கழகங்களுக்கு 7 கோடி ரூபா ஒதுக்கீடு

பல்கலைக்கழகங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் தனியார் கட்டிடங்களை வாடகைக்குப் பெறுவதற்குப் பல்கலைக்கழகங்களுக்கு ஏழு கோடி ரூபா வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அவசரமாக விடுதி வசதி தேவைப்படும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இவ் வசதியைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இத் தனியார் கட்டிடங்கள் வாடகைக்குப் பெறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொட்டாவ வங்கிக் கொள்ளை தகவலுக்கு சன்மானம்

கொட்டாவ வங்கிக் கொள்ளை சம்பந்தமாக தகவல் தருவோருக்கு 50 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென பொலிஸ் தலைமையகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இவ் வங்கியிலிருந்து எட்டு இலட்சம் ரூபா ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

## முன்னுரிமை

பாடசாலைகளின் நிதி வளம், ஆசிரியர் வளம், பௌதீக வளங்கள் தொடர்பாக பங்கீடு செய்யும்போது தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தி உள்ளார்.

ஷப்ரா கிண்ணத்துக்காக

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க நடத்தும்
கிரிக்கெட் போட்டித் தொடர்

இறுதியாட்டம்

ஷப்ரா அணி
எதிர்
ஜொனியன்ஸ் அணி

நாளை
யாழ். இந்து மைதானத்தில்!

05053

Bata பாட்டா

வடபகுதி மக்களின் நலன் கருதி தற்போது
வவுனியா நகரில்
மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

25% விசேட கழிவு உண்டு

உங்கள் தேவைகளுக்கு
பாட்டா மொத்த விற்பனை நிலையம்

இல. 35, மில் றோட், வவுனியா
இல. 30, குமார வீதி, கொழும்பு-11

05045

## சீஷெல்ஸ் நாட்டில் விநாயகர் ஆலயம்

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்து மக்கள் வாழ்ந்துவரும் சீஷெல்ஸ் நாட்டில் விநாயகருக்கு ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. சமீபத்தில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட இவ்வாலயத்துக்கு நவசக்தி விநாயகர் நூதன ஆலயம் என பெயர் சூட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு சிற்ப வேலைப்பாடுகளுடன் இங்கு வாழும் ஐயாயிரம் இந்துக்களைக் கொண்டு இவ்வாலயம் உருவாகியுள்ளது.

## பரீட்சையில் காப்பியடிப்பதில் இப்போது புதிய முறை!

பிற நாடுகளில் பரீட்சையில் காப்பியடிப்பதற்கு தற்பொழுது நவீன முறைகள் பயன்படுத்தப்படுகின்றனவாம்.

சித்திர குப்தா என்ற இடத்தில் பரீட்சை எழுதச் சென்ற மாணவன் இப் பரீட்சையில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுவதில் புதிய முறையைக் கையாண்டதனால் பரீட்சை மேற்பார்வையாளரினால் பிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் பரீட்சை பி. எஸ். சி. தேர்வுக்காக நடத்தப்பட்டது. இப் பரீட்சையை எழுதிய குறிப்பிட்ட பி. எஸ். சி. மாணவன், தனது சட்டைப் பையினுள் மறைத்து பரீட்சை மண்டபத்துக்குள் கொண்டு வந்த சிறிய வயர்லெஸ் கருவி மூலம் பரீட்சை வினாக்களை வெளியில் நின்ற தனது நண்பனுக்குக் கூற அந் நண்பனும் தான் வைத்திருந்த வயர்லெஸ் கருவி மூலம் பதிலைக் கூறியதாகவும், இதனை அவதானித்த பரீட்சை மேற்பார்வையாளர் குறிப்பிட்ட பரீட்சை எழுதிய மாணவனைப் பிடித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (15)

## வானியல் நிபுணர் கண்டுபிடிப்பு

பூமி தன்னைத்தானே ஒரு முறை பூரணமாகச் சுற்றி வர எடுக்கும் நேரம் 24 மணித்தியாலங்கள் என்பது எகிப்தியர்களால் கணிக்கப்பட்டு இறிஸ்துவுக்கு முன்பே பல நூற்றாண்டு காலமாக இருந்து வரும் பொதுக் கணக்கு.

ஆனால் தற்பொழுது வானவியல் நிபுணர்கள் தன்னைத்தானே பூமி சுற்றி வரும் வேகம் குறைந்து வருகிறது என்பதை மேற்கொண்ட ஆய்வுகளின் பயனாக வெகு துல்லியமாகக் கண்டறிந்து கூறியுள்ளார்கள்.

இப்படி பூமியின் வேகம் குறைவதினால் ஒரு நூற்றாண்டிற்கு ஆயிரத்தில் இரண்டு வினாடி காலம் ஒவ்வொரு நாளுக்கும் உரிய நேரம் அதிகமாகிறது.

பூமியின் சுழற்சியில் ஏற்பட்டுள்ள இந்த வேகக் குறைவு மனித குலத்திற்கு ஏற்படுத்தக்கூடிய சாதக, பாதக விளைவுகளைப் பற்றி விரிவான அடிப்படையில் ஆராய்ந்து அறிய பல நாட்டு வானியல் ஆராய்ச்சியாளர்கள் எதிர்வரும் யூலை மாதத்தில் கிறீன்விச்சில் ஒன்று கூடி ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர். 16

### அங்கீகாரம்

யூகோஸ்லேவியாவிலிருந்து பிரிந்துசென்ற குரோவேசியா, ஸ்லோவேனியா, பொஸ்னியா, ஹெர்ஸகோவியா ஆகியவற்றினை தனி நாடுகளாக ஸ்ரீலங்கா அரசும் அங்கீகரித்துள்ளது. 15

## வருமானவரி செலுத்தாத பிரபல கோடீஸ்வரர்கள்

இந்தியாவின் பிரபல கோடீஸ்வரர்களான டாட்டா பிர்லா பெருந்தொகைப் பணம் வருமானவரி செலுத்தாமல் உள்ளனர். டாட்டா 167 கோடி இந்திய ரூபாவும், பிர்லா 66 கோடி ரூபாவும் வருமானவரி பாக்கியாகச் செலுத்தாமல் உள்ளனர்.

இது குறித்து அண்மையில் இந்திய நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (22)

## தமிழக குண்டுவெடிப்பு; அதிகாரிகள் நிலைப்பாடு

தமிழகத்தில் உதகமண்டலப் பகுதியிலுள்ள இராணுவ ஆயுதத் தொழிற்சாலையில் சில நாட்களுக்கு முன் ஏற்பட்ட சம்பவம் தற்செயலானது என நம்பும் அதிகாரிகள் சதி நாசவேலையாக இருக்கலாம் என்ற கூற்றையும் நிராகரிக்கவில்லை என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் குண்டுவெடிப்பில் அறுவர் கொல்லப்பட்டனர் பதினைந்து பேர் காயமுற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மூளை மாற்று ஆராய்ச்சி வெற்றியளித்துள்ளது

தற்போது ஒருவரின் மூளையை இன்னொருவருக்கு மாற்றலாமென ஆராய்ச்சி மூலம் வைத்திய நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதன் மூலம் புத்தி குறைந்த ஒருவரையும் அறிவாளியாக்க முடியுமென இவர்கள் கூறுகின்றனர்.

தேனீக்களில் இதற்கான ஆராய்ச்சி பரிசோதனை செய்யப்பட்டு வெற்றியளித்துள்ளது. இதற்கு மூளையை மாற்றத் தேவையில்லை. அதிலுள்ள புரத அணுக்களை மட்டும் மாற்றினாலே போதும் என லண்டனைச் சேர்ந்த கிரீவரோய் என்ற நிபுணர் தெரிவித்துள்ளார். (22)

★ நண்டுப் பொதிக்குள் மறைக்கப்பட்டிருந்த

## ரூபா 1 கோடி வெளிநாட்டு நோட்டுக் கடத்தல் முறியடிப்பு

கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஒரு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நோட்டுக் கடத்தல் முயற்சி நேற்று காலை முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள ஏற்றுமதிக் கம்பனி ஒன்று சிங்கப்பூரிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு முகவரியிட்டு அனுப்பிய நண்டுப் பொதிக்குள் இக்கரன்ஸி நோட்டுக்கள் காணப்பட்டன.

கடலுணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் பிரபலமான கொழும்பிலுள்ள ஏற்றுமதி நிறுவனம் ஒன்றே இதில் சம்பந்தப்பட்டுள்ளதாக விசாரணை நடத்தி வரும் சுங்கப்பகுதி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம் மோசடி சில காலமாக நடைபெற்று வந்துள்ளது என்றும் தங்க பிஸ்கட்டுகளை நாட்டுக்குள் கடத்தி வருவதற்காக இந்த வெளிநாட்டுக் கரன்ஸி நோட்டுக் கடத்தலில் செல்வாக்குமிக்க வர்த்தகர் குழுவொன்று ஈடுபட்டு வந்துள்ளதாக நம்பப்படுகிறது.

அமெரிக்க டொலர்கள், ஸ்ரேலிங் பவுண், சிங்கப்பூர் டொலர் ஆகிய வெளிநாட்டு நோட்டுக்கள் பொதிக்குள் இருக்கக் காணப்பட்டன.

### சிகரட் விலை 10 சதத்தால் அதிகரிப்பு

சகலவிதமான சிகரட்டுகளினதும் விலைகள் பத்துச் சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ் விலை அதிகரிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### உணவு முத்திரை

7 ஆவது தொடர் உணவு முத்திரையின் சித்திரை மாதப் புள்ளிக்கு அடுத்த வாரத்தில் இருந்து உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என யாழ். பல நோ. கூ. சங்க வட்டாரம் தெரிவித்தது.

அத்தோடு 7 ஆவது தொடர் உணவு முத்திரைகள் கிராம சேவையாளர்களினால் தற்போது வழங்கப்பட்டுவருகிறது. (47)

### விழியற்றோருக்கு பூங்கா

ஹொங்கொங் அரசு பார்வையற்றோருக்கென பூங்கா ஒன்றை அமைத்துள்ளது இப் பூங்காவில் 80 வகையான பூச் செடிகள் நாட்டப்பட்டுள்ளன.

பார்வையற்றோர் இவற்றை தொட்டுத் தடவியும், முகர்ந்து பார்த்தும் பூங்காவை ரசித்து வருகின்றனர். (22)

### உபகரணம் வழங்கல்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுவருகின்றன.

யாழ் கோட்டத்திற்கு உட்பட்ட கொத்தணிப் பாடசாலை அதிபர்கள் தமக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களை யாழ். கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு யாழ். கல்வித் திணைக்கள வட்டாரம் தெரிவித்தது. (47)

### கலிபர் தாக்குதல்

மண்டைதீவு முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை 7. மணி தொடக்கம் 8 மணிவரை கலிபர் தாக்குதலை படையினர் கோட்டையை நோக்கி மேற்கொண்டனர். விடுதலைப்புலிகளும் கோட்டையை அண்டிய பகுதிகளிலிருந்து படையினரை நோக்கி பதில் தாக்குதல்களை தொடுத்ததையும் அவதானிக்க முடிந்தது. (15)

## கடலில் கைதானோர் பற்றிய தெளிவான விவரங்கள்

ஏற்கனவே பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட, கடலில் கைது செய்யப்பட்டவர்களின் விவரங்களில் சிலவற்றில் பெயர், கைது செய்யப்பட்ட இடம், திகதி போன்றன தெளிவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தன. அவற்றின் விவரங்கள் அரசாங்க அதிபருக்குக் கிடைக்கப் பெற்றதனால் கீழே தரப்பட்டுள்ளன

இல 59 இராமன் இராசம் வட்டார இல.5, நயினாதீவு

இல, 61 சிவலிங்கம் அருணாசலம் குருநகர் யாழ்ப்பாணம் 15-2-91

இல; 62 விக்ரர் விங்கர் சீடாக் வட்டார இல.19

இல: 75 மனுவல் அன்ரனி 34 குருநகர் யாழ்ப்பாணம்

இல. 79 சிதம்பரப்பிள்ளை நிமலகுமார் வேதக்கோவிலடி பருத்தித்துறை 29-1 91 பருத்தித்துறை

இல. 92 நடராஜா ராஜ்குமார் விநாயகுலம் பருத்தித்துறை

இல. 108 தேவசகாயன் அருணேசன் கோவில் பெரியகுளம் வவுனியா

இல 111 டிரசி வைத்திலிங்கம் தமிழ் நாடு இந்தியா 27-2-91 பருத்தித்துறை (47

## யாழ். மாவட்டத்தில் கைத்தொழிற் பயிராக பீற்றூட்

மரக்கறி வகைகளுள் ஒன்றான பீற்றூட் கைத்தொழிற் பயிராக மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் யாழ். மாவட்டத்தில் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையினருக்கு தொடர்ச்சியாகப் பெருமளவில் பீற்றூட் தேவைப்படுவதனால் கமக்காரர் விளைவிக்கும் பீற்றூட்டை தொடர்ந்து கொள்வனவு செய்ய இவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தற்போது ஒரு கிலோ பீற்றூட் 7 50 சதமாக கொள்வனவு செய்யப்படுகின்றது.

பீற்றூட் பயிர் செய்யும் போது சிபார்சு செய்யப்பட்ட இனங்களாகிய "கிறிம்சன் குளோப்", 'டீற்றோயிட் டார்க் றெட்' என்பவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்யலாம். ஒரு ஹெக்டேயரில் விதைக்க 6 கிலோ விதை போதுமானது. சிறப்பான செய்கையின் கீழ் ஒரு ஹெக்டேயரிலிருந்து 25-30 தொன் பீற்றூட் விளைவாகப் பெறலாம்

தேவையான கிறிம்சன் குளோப் பீற்றூட் இன விதைகளை திருநெல்வேலியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன விவசாயப் பிரிவு விநியோகிக்கத் தயாராகவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

## மலையகத்தில் மீண்டும் வெயில்

கடந்த ஒரு மாத காலம் மலையகத்தில் இடைக்கிடையே மழை பெய்த போதிலும் இப்போது மீண்டும் கடுமையான வெயில் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்து வருவதால் மீண்டும் மின் வெட்டு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மாவத்தகமவில் ஆயுதங்கள் வெடிமருந்துகளுடன் ஒருவர் கைது

மாவத்தகமவில் டி யூ என் எவ் (ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, தலைவர் ஒருவரின் உறவினர் ஒருவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வீடொன்றை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றைக் கைப்பற்றியதாகவும் பிரஸ்தாப சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

## உயிர்க்கும் பறவை

ஃபீனிக்ஸ் (Phoenix) என்ற விநோதமான பறவையைப்பற்றிப் பிரபல கிரேக்கக் காவியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த அதிசயப் பறவை நெருப்பில் எழுந்து சாம்பலாகி மறுபடியும் அதே சாம்பலிலிருந்து உயிர் பெற்று வெளியே வரக்கூடிய சக்தி வாய்ந்ததாம். ஹோமர் எழுதிய 'இலியட்', 'ஒடிஸி' போன்ற படைப்புகளில் இந்த ஃபீனிக்ஸ் பறவையின் அற்புத சக்தியைப் பற்றி வர்ணிக்கப்பட்டுள்ளது.

# பூநகரியில் சிக்கிய லொறிகள்
# யாழ். செயலகத்தில் விவரம்

கடந்த ஆண்டு பூநகரியில் இராணுவ நடவடிக்கையின் போது ஆலடியில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தனியாரின் லொறிகளின் விவரம் கூட்டுப்படைத் தலைமையகத்தினால் யாழ் அரச அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட இப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாகவும் யாழ் அரச அதிபருக்கு கூறப்பட்டுள்ளது.

பூநகரியில் இராணுவத்தினர் தமது பாவனைக்காக வைத்திருக்கும் லொறிகளின் விவரங்கள் இவ்வருமாறு

26ஸ்ரீ 0815, 26ஸ்ரீ 4533, 26 ஸ்ரீ 9554, 26 ஸ்ரீ 9956, 27 ஸ்ரீ 2588, 28 ஸ்ரீ 8871, 40 ஸ்ரீ 3700, 41 ஸ்ரீ 7401, 30 ஸ்ரீ 3806 மிகுதி லொறிகளின் விவரம் இன்று வெளியிடப்படும் என யாழ் செயலகம் தெரிவித்தது 47

## யாழ். அரசாங்க அதிபர் வியாழன் திரும்பினார்

கொழும்பு சென்றிருந்த யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் திரும்பினார்.

யாழ் மாவட்டத்தின் முக்கிய தேவைகள், பிரச்சினைகள் குறித்து அவர் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தியதாக செயலகவட்டாரங்கள் தெரிவித்தன 47

## 3000 அடையாள அட்டைகள் யாழ். செயலகம் வந்தன

சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான அடையாள அட்டைகள் யாழ் செயலகம் வந்து சேர்ந்துள்ளன. கடந்த மார்ச் மாதத்தின் பின்னர் இப்போது தான் அடையாள அட்டைகள் இங்கு வந்துள்ளன.

அடையாள அட்டைகளின் அத்தியாவசியம் பற்றி அடிக்கடி யாழ் அரச அதிபர் ஆணையாளருடனும், கூட்டுப்படைத் தலைமைப் பணிமனையுடனும் எடுத்துக் கூறியதையடுத்தே அவை வந்துசேர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சாதாரண விண்ணப்பங்களுக்கான [illegible] அட்டைகளும், அவசர விண்ணப்பங்களுக்கான 278 அட்டைகளும், பாடசாலைகளுக்கான 590 அட்டைகளும், இணைப்படிவங்களுக்கான 925 அட்டைகளும், 1972-73 இல் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்குப் பதிலான புதுப்பிக்கப்பட்ட 34 அட்டைகளும் வந்துள்ளன என்று தெரிகின்றது.

இவ்வடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ் செயலகத்தில் உள்ள ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வரத் தேவையில்லையென்றும் கூடிய விரைவில் அவை உரியவர்களை வந்து சேருமென்றும் திணைக்களத்துக்கு வருபவர்களிடம் எச் சந்தர்ப்பத்திலும் அட்டைகள் கையளிக்கப்படமாட்டாதென்றும் ஆட்பதிவுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார் 25

## எழுதுவினைஞர் வெற்றிடங்கள் விரைவில நிரப்பப்படும்

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகளில் ஏற்பட்டுள்ள எழுதுவினைஞர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப யாழ் அரசாங்க அதிபருக்கு கொழும்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் அனுமதி வழங்கியுள்ளன

அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 304 பேரில் தற்போது நியமிக்கப்பட்டவர்களைவிட மிகுதிப் பேரை இவ்வெற்றிடங்களுக்கு உடனடியாக நியமிக்க அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவர்களுக்கு விரைவில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன 47

## கல்விப் பணிப்பாளருக்கு மேலும் ஒருவருட சேவை நீடிப்பு

யாழ். கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கத்துக்கு மேலும் ஒருவருடத்துக்கு சேவையாற்றுவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு சென்றிருந்த பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினார்.

பதவி நீடிப்பு வழங்கியதை தொடர்ந்து நேற்று கல்வித் திணைக்களத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார் என தெரிவிக்கப்படுகிறது. 47

### மகலீன்...

ணம் திருநெல்வேலி, கணபதி சந்திரகுமார் பரந்தன், நடராசா வேலுப்பிள்ளை, இத்தாவில், சுப்பிரமணியம் நவரத்தினம் யாழ்ப்பாணம், சின்னவன் திருச்செல்வம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சின்னத்தம்பி துரைச்சாமி தெல்லிப்பளை, சுப்பிரமணியம் கோகுலதாஸ முருங்கன், ஜெயவர்த்தன கீன்கனம் அம்பாறை இராசையா எட்வேட் ஞானராஜ பன்னம்பட்டுபாடசாலை, வின்சன் வில்லியம் மரியதாஸ சுன்னாகம், சன்னதி சிறீகந்தராசா முரசுமோட்டை, கணபதிப்பிள்ளை நவரத்தினம் முரசுமோட்டை, சின்னத்துரை சிறீமோகன் கன்னாகம், அபிராம் செபரட்ணம் யாழ்ப்பாணம், மருதமுத்து சிவசுப்பிரமணியம் கும்பான். இம்மானுவேல் செபமாலை யாழ்ப்பாணம். கனகரட்ணம் பாஸ்கரன் குமரபுரம், கந்தையா மரியபாலன் அரியாலை. கந்தரராஜா சுகுமார் சுதுமலை, கந்தசாமி நாகமணி மாறன் மீசாலை தெற்கு, துரைராசா கிரிதரன் பொத்துவில், அப்புல்கரீம் முகமட் சருவ் யாழ்ப்பாணம். செபஸ்தியன்பிள்ளை அற்புதஞானசிங்கம் யாழ்ப்பாணம், சின்னத்துரை மோகன் மயிலணி வடக்கு, சுல்தான் மொகிடீன் அப்துல்றகீம் யாழ்ப்பாணம். 47

## மத்தியஸ்தர் தினம்

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் நடத்தும் 'மத்தியஸ்தர்கள் தினம்' ஒன்று கூடல் நிகழ்ச்சி இன்று காலை 9 30 மணிமுதல் மாலைவரை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்

### தோல்வியில்...

இராணுவ நடவடிக்கையை நெறிபடுத்த பலாலி ராணுவ முகாமிற்கு வந்திருந்தனர்.

இதனிடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் வலலாய்ப் பகுதியில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி படையினரின் இரு கவச வாகனங்கள் தகர்ந்ததாக தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படும் 'ஒபரேஷன் செகின்ட் ரவுண்ட்' என்ற இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுவதாகவும் மோதல்கள் நீடித்து வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## இறுதியாட்டம்

"ஷறா" கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

40 ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதுகிறது

நாளை காலை 9.30 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும்

யாழ் விவசாயத் திணைக்களத்தின் உதவி இயக்குனர் திரு. கே. குணரட்ணம் இந்த ஆட்டத்துக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் திருமதி கருணேஸ்வரி குணரட்ணம் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை வழங்குவார்

### 9 வேங்கைகள்...

திருலோகநாதன் சரசாலை) விவேகன் (பா சிவநேசன் கலவெட்டி) இலக்கியன் (சி, புஷ்பனந்தன் கட்டுடை) ஆகிய போராளிகளே வீரச்சாவு எய்தினர், 07

### அச்சுவேலி...

அச்சுவேலி வைத்தியசாலை நேற்று முழுமையாக இயங்கியது. ஊழியர்கள், நோயாளர்கள் வழமைபோல் வந்திருந்தனர்.

வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலை ஊழியர்கள் கடமைக்கு வந்திருந்தனர். நோயாளர்கள் வரவு மிகக் குறைவாகவே இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 43,07

### வடக்கை...

நசுக்குவதாக உலகம் முழுவதும் கருதுகிறது. இதனால் சமாதானம் இன்றும் உருவாக முடியாமல் இருக்கிறது. சமாதானம் இல்லாது அபிவிருத்தியை, அமைதியை நாட்டில் ஏற்படுத்த முடியாது" என்றார்.

அமைதியை ஏற்படுத்த படையினர் முயற்சி பதாகவும் ஜனாதிபதி அப்போது குறிப்பிட்டார்,

வடக்கு கிழக்கில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் மீண்டும் ஏற்படுத்துவது அரசின் முக்கிய குறிக்கோளாகும் என அவர் மணிக்கூட்டு கோபுரத்தை திறந்து வைத்து பேசுகையில் கூறினார்.

இதற்கு சகலரதும் உதவியும் ஒத்துழைப்பும் தேவை வடக்கு கிழக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்ள உதவி வழங்கும் நாடுகள் உதவிய விக்க உறுதி கூறியுள்ளன இதற்கு முதலில் சமாதானம் ஏற்படவேண்டும்

வடக்கு கிழக்கு பிரச்சினைத் தீர்வுக்குரிய யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக்குழுவிடமிருந்து அரசாங்கம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது,

சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்று இக்குழுவிடமிருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டு எனவும் அவர் மேலும் சொன்னார்,

## வடமராட்சியில் இருந்து 2000 குடும்பம்இடம்பெயர்வு

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ தாக்குதலை அடுத்து வடமராட்சியில் இருந்து 2000 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதில் 327 குடும்பங்கள் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியிலும், 60 குடும்பங்கள் நீர்வேலியில் உள்ள மெதடிஸ்த தேவாலயத்திலும் தங்கியுள்ளனர் மற்றைய குடும்பங்கள் இப்பகுதியில் உள்ள நண்பர்களினது வீடுகளில் தங்கி உள்ளன.

இவர்களுக்கான உதவிகளை தமிழர் புனர் வாழ்வுக் கழகம், றெ பானா, இலங்கைசெஞ்சிலுவைச்சங்கம் மனித முன்னேற்ற நடுநிலையம் ஆகியவை மேற்கொண்டுள்ளன. 15

## நெசவு நூல்களை எடுத்து வர இராணுவம் அனுமதித்தது

யாழ் மாவட்ட சாத்தறி நெசவாளர்களுக்கான நூல்களை யாழ்ப்பாணம் எடுத்துச் செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதாக அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இந்நூல் பந்துகள் கப்பலில் எடுத்துவருவதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் பனை அபிவிருத்திச் சபைக்கு தேவையான பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். 47

## உதவி அரச அதிபர்களுக்கு இடமாற்ற உத்தரவு

யாழ் குடாநாட்டின் பல பிரதேசச் செயலர்களுக்கு உதவி அரச அதிபர் இடமாற்றம் கிடைத்துள்ளதாகச் செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது இந்த இடமாற்ற உத்தரவுகள் வடக்கு கிழக்கு மாகாண அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகிறது

கரவெட்டி பிரதேசச் செயலர் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவுக்கும் பருத்தித்துறைப் பிரதேசச் செயலர் கரவெட்டிக்கும் கோப்பாய் பிரதேசச் செயலர் பருத்தித்துறைக்கும் சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் கோப்பாய்க்கும் ஊர்காவற்றுறைப் பிரதேசச் செயலர் தன்னுடைய கடமையோடு சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது 25

## கணித, விஞ்ஞான பரீட்சை இன்று நடைபெறும்

திட்டமிட்டபடி இன்று நடைபெறவுள்ள கணித விஞ்ஞான ஆசிரியர் தெரிவுப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் யாழ் கல்விப்பணிப்பாளரால் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது

பருத்தித்துறையில் 3 பரீட்சை மண்டபங்களும் இராமநாதன் கல்லூரியில் ஒருமண்டபமும் யாழ்நகரில் இரண்டு மண்டபங்களும் இதற்கென ஒதுக்கியிருப்பதாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரம் தெரிவித்தது 47 06

## மீனவர் மீது ஹெலி சூடு

பாஷையூர், குருநகர் கடற்பிராந்தியத்தில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் மீது நேற்று காலை 10-30 மணியளவில் இப்பகுதிக்கு வந்த ஹெலி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டு கலிபர் தாக்குதலை மேற்கொண்டது

ஆனால் மீனவர்கள் வள்ளங்களில் இருந்து கடலில் குதித்து தெய்வாதீனமாக உயிர்தப்பி கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. 47

## அச்சுவேலிப் பகுதிக்கு ஷெல் தாக்கு

அச்சுவேலி, வளலாய், பத்தமேனி ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று காலை 6.30 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது 0647

## ராஜினாமாவுக்கு மறுப்பு

பட்டியாலா வானொலி நிலைய இயக்குநர் பஞ்சாப் தீவிரவாதிகளால் கொலைப்பட்டதை அடுத்து மத்திய தகவல் துறையமைச்சரை ராஜினாமா செய்யுமாறு வானொலி நிலைய ஊழியர்கள் வற்புறுத்தியுள்ளனர். எனினும் தாம் ராஜினாமா செய்வதன்மூலம் பிரச்சினைகள் தீருமாயின் ராஜினாமா செய்யத்தயார் எனக்கூறி அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய மறுத்து விட்டார்.

## சுகாதார வாரம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (47)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 30-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது